රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Services, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி:**(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් தொலைநகல்:**(94) 011- 2692254** Fax
ඊ-මේල් மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: COM/PMAS/I-I
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி: / Date: 2021.10.22

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள் / பிரதேச செயலாளர்கள்

**<u>ஓய்வு பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் ஈடுபடுத்துதல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக, பொது சேவைகள் ஆணைக்குழு செயலாளரின் இல. PSC/APP/01/07 (IV)/2021 மற்றும் 2021.10.06 ஆந் திகதிய கடிதத்துடன் தொடர்பானது.

02. ஓய்வு பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் / முகாமைத்துவ சேவை அதி உயர் தர உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் ஈடுபடுத்துவதற்காக தொடர்புடைய விண்ணப்பங்களை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பும் போது, திருத்தப்பட்ட புதிய EST-01 படிவத்துடன் பின்வரும் தகவல்களை சரியாக உள்ளடக்கி சமர்ப்பிக்குமாறு, பொது சேவைகள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத்தருகிறேன்.

- ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் பணிபுரிவதற்கு முன்மொழியும் சேவை நிலையத்தில் உள்ள, அப்பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையையும் வெற்றிடங்களின் எண்ணிக்கையையும் சரியாக சமர்ப்பித்தல். (EST 01 தொடர் இல. 03. I)
- அந்த வெற்றிடமாக உள்ள பதவி முகாமைத்துவ அதி உயர் தர பதவியாக இருந்தால், அந்த சேவை நிலையத்தில் பணிபுரியும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வகுப்பு I இல் உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை. (EST 01 தொடர் இல. 03. I இல் குறிப்பிடவும்)
- மீள சேவையில் ஈடுபடுத்துவதற்கு முன்மொழியப்பட்ட ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் இது வரையில் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள மொத்த கால அளவு. (EST 01 தொடர் இல. 01. IX)

03. இதன் பின்னர் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் / முகாமைத்துவ சேவை அதி உயர் தர உத்தியோகத்தர்களை மீள சேவையில் ஈடுபடுத்துவதற்காக செய்யப்படும் கோரிக்கைகளில் மேற்படி தகவல்களையும் சரியாக உள்ளடக்கி சமர்ப்பிக்குமாறு தயவுடன் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு